# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102022

1. District : ஈரோடு PS: ஊ.த.க.பிரிவு Year: 2018 FIR No.: 2/18/AC Date:- 14.6.18
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7, 12, 13(2) r/w 13(1)(d)
(ii) Act சட்டம்: இந்திய தண்டனைச் சட்டம் Sections பிரிவுகள்: 109
(iii) Act சட்டம்: இந்த விசாரணை முறைச்சட்டம் Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 14.6.18 Date to : —
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 06.45 hrs Time to : 09.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 14.6.18 Time : 15.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 14.6.18 Time : 15.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலம் (சுயமாக)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ வடமேற்கு
Beat Number : — (b) Address : RTO சோதனைச் சாவடி, பண்ணாரி ஈரோடு மாவட்டம்
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. புஷ்பராஜ் (b) Father's/ Husband's Name : V. சாமிநாதன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : காவல் துணை கண்காணிப்பாளர் (g) Address : ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு, ஈரோடு
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) M. ராமன் (46) த/பெ A. மாயாண்டி MVI (NT), பண்ணாரி போக்குவரத்து சோதனை சாவடி, ஈரோடு மாவட்டம்
2) B. அமிர்தம் த/பெ ஐயம்பெருமாள், O.A. பண்ணாரி சோதனை சாவடி, ஈரோடு மாவட்டம்
3) A. ஞானசிவன் @ சிவன் (39) த/பெ அற்புதராஜ், 3-வது [illegible], பேங்க் ரோடு, [illegible]பட்டி, திண்டுக்கல் (தனிநபர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதமில்லை —

GCP 240-34(Type-2) 90.000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : கைப்பற்றப்பட்ட பணம் ரூ 26,330/- மட்டும்
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் கம்ப்யூட்டர் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
14.6.18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.6.18
0900 hrs

Name: பெயர் [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர்
கண்காணிப்பாளர்
உ.கு.பு.பிரிவு, ஈரோடு.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

சமர்ப்பிக்கப்படுகிறது.

Contents of FIR in Cr.No 02/2018/AC/ER U/s 102 CrPC, 7, 12, 13(2) r/w 13(1) (d) of PC Act 1988 and 109 IPC.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி போக்குவரத்து சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யாமல் இருக்கவும், டிரிப்சீட்டில் சீல் வைத்து கொடுப்பதற்கும், தற்காலிக அனுமதி வழங்குவதற்கும் மற்றும் இதர அரசு அலுவல்களை செய்வதற்கும் செக்போஸ்டில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் நேரடியாகவும், தனிநபர்கள் மூலமும் மாமூலாக (லஞ்சம்) பணம் வசூல் செய்து வருகிறார்கள் என்று கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 14.06.2018ம் தேதி காலை 6.45 மணிமுதல் 09.30 மணிவரை பண்ணாரியில் உள்ள போக்குவரத்து சோதனை சாவடியில் ஈரோடு, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான், சாட்சிகள் 1)திரு.P.ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர், இயக்குதலும், பேணுதலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கவுந்தப்பாடி மற்றும் திரு.K.துரைசாமி, கூட்டுறவு சார்பதிவாளர், பொதுவிநியோக திட்டம், ஈரோடு ஆகியோர் முன்னிலையில் காவல் ஆய்வாளர் திருமதி. நல்லம்மாள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் திடீர் சோதனை மேற்கொண்டோம்.

இந்த திடீர் சோதனையின் போது, பண்ணாரி போக்குவரத்து சோதனை சாவடியின் நுழைவு வாயிலின் உள்ளே இடது புறமாக மேற்குபார்த்தவாறு போடப்பட்டிருந்த இரும்பு டேபிள் மற்றும் பிளாஸ்டிக் சேரில் ரூபன் என்கிற திரு.ரெனால்டு ரூபன் என்பவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு இடது புறமாக தெற்குபார்த்தவாறு போடப்பட்டிருந்த கம்ப்யூட்டர் இருக்கையில் திரு.சோமேஸ் என்ற தனிநபர் அலுவலக கம்ப்யூட்டரில் பதிவுகளை செய்துகொண்டிருந்தார். மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு முன்பாக இடதுபுறத்தில் போடப்பட்டிருந்த மேற்குபார்த்த டேபிள் சேரில் அலுவலக உதவியாளர் திருமதி.அமிர்தம் அமர்ந்து கொண்டு சீல் அடிக்கும் பணிகளை செய்து கொண்டிருந்தார். அவரது டேபிளின் மேல் ரூபாய் நோட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் டேபிளை ஒட்டி இடதுபுறம் இரும்பு ஸ்டூலின் மேல் அட்டைபெட்டியில் கத்தையாக பணமும் மற்றும் இதர ரூபாய் நோட்டுக்களும் உள்ளே வைக்கப்பட்டிருந்தது. சோதனைக்குழுவினர் உள்ளே நுழைந்தவுடன் திடீர் சோதனைக்கு வந்திருந்த விபரத்தை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில், ரூபன் என்கிற ரெனால்டு ரூபன் என்பவரை விசாரித்த போது, தான்

சத்தியமங்கலத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான பி.வி.கே கட்டிடத்தில் வாடகைக்கு ரூம் எடுத்து தங்கிக்கொண்டு பண்ணாரி சோதனை சாவடியில் வேலை செய்து வருவதாகவும், கடந்த சுமார் 6 மாதங்களாக மேற்படி சோதனை சாவடியில் பணிபுரிந்து வருவதாகவும், இங்கே பணிக்கு வரும் அலுவலர்களுக்கு சாப்பாடு, டீ ஏற்பாடு செய்வதோடு சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களில் லோடுக்கு தகுந்தவாறு மாமூல் வசூல் செய்து அலுவலர்களுக்கு கொடுப்பதாகவும் அதற்காக பணிக்கு வரும் அலுவலர்கள் ஒரு நாளைக்கு 300 ரூபாய் சம்பளமாக கொடுப்பார்கள் என்றும் அந்த வகையில் நேற்று 13.06.2018 அன்று புதியதாக சோதனை சாவடி அலுவலுக்கு வந்த MVI திரு. ரமணன் அவர்களும், OA திருமதி அமிர்தம் அவர்களும் தன்னை எப்போதும் போல வேலை செய்ய சொல்லி விட்டதால் நேற்று இரவு 8 மணிமுதல் செக்போஸ்டை கடந்து செல்லும் வாகனங்களில், கல் லோடு லாரிகளுக்கு 1000 ரூபாயும், மற்ற வாகனங்களுக்கு லோடுகளுக்கு தகுந்தாற்போல் வசூல் செய்ததாகவும், அதை இன்ஸ்பெக்டர் டேபிள் அருகில் இருந்த அட்டை பெட்டியில் போட்டதாகவும், கடைசியாக வசூல் செய்த தொகைகளை தனது பாக்கெட்டில் வைத்திருப்பதாகவும் சொல்லி அவரது இடது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் 6 அடங்கிய ரூ.3000/-மும் வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு இருநூறு ரூபாய் நோட்டு மற்றும் பதினெட்டு 100 ரூபாய் நோட்டுகள் அடங்கிய மொத்தம் ரூ.2000/- ஆக மொத்தம் ரூ.5000/-ஐ பேண்ட் பாக்கெட்களில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.. அலுவலக உதவியாளர் திருமதி.அமிர்தம் அவர்களை விசாரணை செய்தபோது, அவர் நேற்று இரவு 8 மணிமுதல் தானும் MVI திரு.ரமணன் அவர்களும் செக்போஸ்டில் பணிக்கு சேர்ந்ததாகவும், ஏற்கனவே செக்போஸ்டில் வேலை செய்து வந்த திரு.சோமேஸ் மற்றும் ரூபன் ஆகிய தனி நபர்களை ஏற்கனவே அவர்கள் செய்து வந்த வேலைகளை செய்யசொல்லிவிட்டதாகவும், ஒரு சில வாகன ஓட்டுநர்கள், தான் அமர்ந்திருந்த டேபிள் மீது பணத்தை வைத்துவிட்டு சீல் வைத்துக்கொண்டு சென்றதாகவும், ஒரு சிலர் சில்லறையாகவும், ஒரு சிலர் முழு நோட்டாக கொடுத்து சில்லறை மாற்றிக்கொண்டு சென்றதாகவும் தெரிவித்தார். அவரது டேபிளின் மீது காணப்பட்ட மொத்தம் ரூ.2140/- தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கம்ப்யூட்டரில் பதிவுகள் மேற்கொண்டிருந்த திரு.சோமேஸ் தனிநபரை விசாரித்த போது, அவர் தான் சத்தியமங்கலத்தில் வாடகைக்கு ரூம் எடுத்து தங்கிக்கொண்டு பண்ணாரி செக்போஸ்டில் சுமார் ஒரு வருடமாக போக்குவரத்து துறை அலுவலர்களின் அறிவுரைப்படி வேலை செய்துவருவதாகவும், பகல் வேளைக்கு ரூ.500/-ம் இரவு வேலைக்கு ரூ.600/- இன்ஸ்பெக்டர் கொடுப்பார் என்றும், நேற்று இரவு புதியதாக செக்போஸ்டிற்கு வந்த திரு.ரமணன் அவர்களும், திருமதி அமிர்தம் அவர்களும் எப்போதும்போல தன்னை கம்ப்யூட்டரில் வேலை செய்ய சொன்னதால் கம்ப்யூட்டரில் பில் போட்டு கொடுக்கும் வேலையை

செய்ததாகவும், பில்லுக்கான பணத்தை லாரி டிரைவர்கள் கொடுத்தால் அதை ஆய்வாளர் டேபிளின் அருகில் இருக்கும் அட்டைபெட்டடியில் போட்டு வைத்து விடுவதாகவும், மேலும் செக்போஸ்டில் மாமூல் வாங்கும் விதம் குறித்து தெரிவித்தார். மேலும், இந்த நடவடிக்கையின் போது பில் மற்றும் டிரிப் சீட்டுகளில் சீல் இட வந்த நபர்களில் திரு.ராஜேஸ், (வயது 28) த/பெ வீரபத்திரப்பா, 87, ஜோதிகவுண்டன் புரம், 2 வது வீதி, சாம்ராஜ் நகர் என்ற நபரிடம் செக்போஸ்டில் மாமூல் பெறப்படும் விதம் குறித்து வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் இந்த நடவடிக்கையின் போது தற்காலிக அனுமதி (TP) பெற வந்த நபர்களில் (1).நாகலிங்கம் (46) த/பெ செல்லையப்பன், 346,வசந்தம் கார்டன், தாராபுரம் ரோடு, கே.செட்டிபாளையம், திருப்பூர், மற்றும் (2) திரு.கே கருணாநிதி, வயது 47,த/பெ காளியுடையான், உதிரம்பூண்டி கிராமம், தேவனாம்பட்டி (po), திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர்களிடம் செக்போஸ்டில் மாமூல் பெறப்படும் விதம் குறித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. மேலும் இந்த நடவடிக்கையின் போது நேற்று இரவு 8 மணிமுதல் இன்று காலை 8 மணிவரை ரசீதுகளின்படி வசூல் செய்யப்பட்ட தொகைமொத்தம் ரூ.1,29,550/- என்று கம்ப்யூட்டர் பட்டியல்படி கண்டறியப்பட்டது. மேற்படி தொகையை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரித்த போது, அவருடைய இருக்கைக்கு இடது புறமிருந்த அட்டை பெட்டியில் உள்ள பணத்தில் இருப்பதாக தெரிவித்தார். எனவே, அட்டை பெட்டியில் இருந்த பணத்தை சரிபார்த்த போது அதில் ரூ.140740/- இருந்தது. அதாவது வசூல் செய்யப்பட்ட தொகையை விட ரூ.11,190/- அதிகமாக காணப்பட்டது. மேற்படி அதிகப்படியான தொகை ரூ.11,190/-க்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால், விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அரசுக்கு சேரவேண்டிய தொகை ரூ.129550/- மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த நடவடிக்ககையின் போது மோட்டார் வாகன ஆய்வாளர் இருக்கைக்கு பின்னால் இருந்த உள் அறையினுள் கிழக்கு பார்த்தவாறு இருந்த ¾ சைஸ்இரும்பு பீரோவினுள் மேலிருந்து கீழ் 3 வது ரேக்கில் ரெக்கார்டுகளுக்கு இடையில் மொத்தம் ரூ.8000/- மடித்து வைத்த நிலையில் காணப்பட்டது. மேற்படி தொகையை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ரமணன் அவர்களிடம் விசாரித்த போது அவர் எந்த விளக்கமும் அளிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.26330/- ஆகும். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ரமணன் மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.அமிர்தம் ஆகியோர்கள் திடீர் சோதனையின் போது சட்ட பிரிவுகள் 102 CrPC and sec 7, 13(2) r/w 13(1) (d) of PC Act 1988 ன்படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்தது. மேலும் ரூபன் என்கிற திரு.ரெனால்டு ரூபன் திடீர் தணிக்கையின் போது சட்ட பிரிவுகள் 7 r/w 12 and 13(2) r/w 13(1) (d) of PC Act 1988 r/w 109 IPC ன்படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்தது. திடீர்

தணிக்கையில் கண்டுபிடித்த குற்றம் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ரமணான், அலுவலக உதவியாளர் திருமதி.அமிர்தம் மற்றும் ரூபன் என்கிற திரு.ரொனால்டு ரூபன் (தனி நபர்) ஆகியோர்கள் மீது இன்று 14.06.2018ம் தேதி 15.00 மணிக்கு ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 2/2018/AC/ER, u/s 102 CrPC 7, 12, 13(2) r/w 13(1) (d) of PC Act 1988 and 109 IPC ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவலறிக்கையின் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

14.6.18

(சா.புஷ்பராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
ஈரோடு.